பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : ஐப்பசி 23உ (9—11—67) வியாழன் வெளியூர் : ஐப்பசி 24உ (10—11—67) வெள்ளி [இதழ் : 122

வெற்றுக் கூச்சலை வெறுத்து ஒதுக்கினர்!

"காங்கிரஸ் தலைவர் காமராஜ் உள்பட எல்லோருமே, அவசியப் பொருள்களின் விலைவாசிகள் தி.மு.க. ஆட்சியில் உயர்ந்துவிட்டனவென்று கூறிவந்தனர். ஆனால், இந்தப் பிரச்சாரமெல்லாம் ஓட்டர்களின் மனதில் பதிந்ததாகத் தெரியவில்லை."

—'தினமணி' : 9—11—67

மகத்தான வெற்றியும் மாபெரும் தோல்வியும்!

தான் நடக்கும் ஒவ்வொரு அடியையும் அண்ணா அவர்கள் எப்படி அளந்து—எச்சரிக்கையாக எடுத்துவைக்கிறார்கள் என்பதற்கு, வெற்றி வாகை சூடியிருக்கும் முரசொலி மாறனின் சாதனைச் செய்தி, மேலும் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது!

அண்ணா அவர்கள் தேர்தல் கூட்டம் ஒன்றில் கூறியதுபோல்,

எவருக்கும் இதுவரையில் கிடைக்காத பெரும்பேறுகள்—பின்னணி நிலைமைகள் முரசொலி மாறன் அவர்களுக்கு இந்த இடைத் தேர்தலில் துவக்கமுதலே கிட்டியிருக்கிறது!

அண்ணா அவர்கள் போட்டியிட்ட தென் சென்னைத் தொகுதி என்ற 'நதி மூலம்' காவிரிபோல் பெருகி—பொங்கி—பல்வேறு சிறப்புக்களைத் தாங்கி அண்ணா ஆட்சியின் எட்டு மாத சாதனையை மக்கள் முன் படைக்கும் ஒரு சோதனைப் போட்டியாக பரிமளித்து—இந்தியத் துணைக்கண்டத்து அரசியல் கடலில் கலந்தது!

தாங்கள் சொல்லும் சொல்லின் உபயோகத்தினை—இந்திய அரசியலில்—எல்லோரையும்விட மிக அதிகமாக உணர்ந்திருப்பவர்கள் அண்ணாவும், இராஜாஜியும்!

காமராசரின் நேரடித் தலைமையில் முழு மூச்சுடன் துவக்கி—முழு பலத்துடன் இயங்கிய காங்கிரசின் பிரச்சார நடவடிக்கைகளைக் கவனித்த பின்னரே அண்ணா அவர்களும், இராஜாஜி அவர்களும்—'ஆம்; இது கௌரவப் போட்டியே' என்ற முடிவுக்கு வந்த வகையில்—மக்களிடையே ஆதரவு கோரிவந்தார்கள்!

★ 'கழக முதல்வர்' என்ற முறையில் அல்லாது—'மாநில முதலமைச்சர்' என்ற நிலையிலும் இல்லாது—'மக்கள் முதல்வர்' என்ற வகையில் அண்ணா அவர்கள், கடந்த பல நாட்களாக சென்னைத் தேர்தல் கூட்டங்களில் தெரிவித்த கருத்துக்களும்—

★ 'முன்னாள் கவர்னர்-ஜெனரல்' என்ற தகுதியில் இல்லாது—'பழைய காங்கிரசு முதலமைச்சர்' என்ற நிலையில் இல்லாமல்—இந்த நாட்டின் அரசியல் சரித்திரத்தில் பெரும் பகுதியினைத் தன்னுடைய வாழ்வுடன் பின்னி இணைய வைத்திருக்கும் அரசியல் மேதை இராஜாஜி அவர்கள், தேர்தலுக்கு இரு தினங்களுக்கு முன்பு மயிலாப்பூரில் நடந்த கூட்டத்தில் வெளியிட்ட கருத்துக்களும்—

தென் சென்னைத் தேர்தலில் மட்டும் அல்ல—இந்தியத் துணைக் கண்டத்தில் பாராளுமன்ற சனநாயகம் இருக்கும் வரையில்—அதற்காகத் தேர்தல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வரையில்—அரசியல் கட்சிகளும், வாக்காளர் பெருமக்களும் மனத்தில் இறுத்திப் பாதுகாக்க வேண்டிய அறிவுரைகளாகும்!

★ வேறு பல காரணங்களினால் அல்லது காங்கிரசின் விஷமத்தனங்களினால் இந்தியாவின் மற்ற மற்ற மாநிலங்களில் உள்ள கூட்டணி ஆட்சிகள் நொடித்து வருவதனைத் தேடிப் பிடித்துத் தமிழகத்துடன் தொடர்புபடுத்திப் பிரச்சாரம் செய்த காங்கிரசின் போக்கு, 'தவறு' என மெய்ப்பிக்கும் வகையில் முஸ்லிம் லீகினரும், தமிழரசுக் கழகமும், மார்க்சிய கம்யூனிஸ்டுக் கட்சியும், மற்ற பிற அமைப்புக்களும் இத்தேர்தலில் கழகத்தின் பக்கம் நின்று பணிபுரிந்த பாங்கும் துணைக்கண்டமே வியந்து பாராட்டும் செயலாக இருக்கிறது.

தமிழகமே கழகக் கோட்டையாகிவருகிறது என்பதனை, தென் சென்னைத் தேர்தல் சரித்திரத்தின் படிப்படியான முன்னேற்றம் எடுத்துக் காட்டுகிறது.

★ **1962-ம் ஆண்டில் கி. மனோகரன் அவர்கள் வென்றது—62,000 வாக்குகள் வித்தியாசத்தில்!**

★ **1967-ல் அண்ணா அவர்கள், பதிவான வாக்குகளில் 59 சதவிகிதத்தினைப் பெற்று, 81,978 வாக்குகள் வித்தியாசத்தில் காங்கிரசைத் தோற்கடித்தார்!**

★ **இப்போது 68 சதவிகித வாக்குகளைப் பெற்றுப் பெரும்பான்மையைப் பெரிதாக்கி, 1,05,708 வாக்குகள் வித்தியாசம் காட்டியிருக்கிறார் முரசொலி மாறன்!**

தேர்தலை, மொழிப் பிரச்சினையின் உரை கல் ஆக்கியது கழகம் மட்டுமல்ல—காங்கிரசும் கூடத்தான்!

'கழக ஆட்சியில் அமைதி இருக்கிறது' என அண்ணா அமைச்சரவை கூறுவதற்கு முன்பாகவே, 'சட்டமும் ஒழுங்கும் சீரழிந்ததாக'க் கூறியதும் காங்கிரசுதான்!

'தொழில் அமைதி கெட்டது' என்றார்கள்; 'சமுதாயத்தில் மக்கள் நடமாடப் பயப்படும் சூழ்நிலை' என்றும் காங்கிரசார் கூறினர்!

'1967-ல் தி. மு. க. ஆட்சி அமைந்தது, மக்களின் தெளிவு இன்மையினால்' என்றார்கள்!

இத்துணையையும் கூறி, தென் சென்னைத் தேர்தலை ஒரு நாடாளுமன்றத் தேர்தலாக மட்டுமல்லாது—கழக ஆட்சியின் எட்டு மாத கால நிர்வாகத்தினைப் பரிசோதனைத் தட்டில் வைத்தது காங்கிரசுதான்!

எனவேதான், 'கழகம் மகத்தான 'வெற்றி'யைப் பெற்றது என்று கூறும்போதே, காங்கிரசு பெற்றிருப்பது 'மாபெரும் தோல்வி' என்றும் கூறவேண்டிய நிலை பிறந்திருக்கிறது!

காங்கிரசுக்காரர்களே எழுப்பிய சவால்களின் படி இன்று முரசொலி மாறன்,

★ கழக நிர்வாகத்தின் சாதனைச் சின்னமாக—

★ தமிழகத்து மொழிப் பிரச்சினையின் பிரதிநிதியாக—

★ '1967-ல் மக்கள் அளித்த தீர்ப்பு சரிதான்' என்பதை மேலும் தெளிவுபடுத்தும் அரசியல் பிரதிநிதியாக—

★ காங்கிரசுக்குப் போடப்பட்ட இரட்டைத் தாழ்ப்பாளாக—

★ அண்ணாவின் தம்பிகள் இலட்சக் கணக்கில் பெருகிவரும்போது அவரது 'இடத்தைப் 'பிடி'த்த ஒரே தம்பியாக—

நாடாளுமன்றம் செல்கிறார்!

இதனையெல்லாம் முன்கூட்டியே உணரும் திறமை பெற்றிருந்ததனால்தான், 'தம்பி மாறனைப் பற்றி நான் பெருமை கொள்கிறேன்' என்று அண்ணா அவர்கள் நகைச்சுவை உணர்வுடன், தேர்தல் பிரச்சாரத் துவக்கக் கூட்டத்திலேயே குறிப்பிட்டுவிட்டார்கள்!

—எஸ். ஆர்.

பக்தவத்சலத்துக்குப் பிறந்த நாள் பரிசு!

'என்னுடைய பிறந்த நாள் பரிசாகத் தென் சென்னை இடைத் தேர்தல் வெற்றியைத் தாருங்கள்' என்று வேண்டுகோள் விடுத்தார்—முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம்! ஆனால் தென் சென்னை வாக்காளப் பெருமக்களோ, கொஞ்சமும் ஈவு இரக்கமில்லாமல் — வாய்விட்டுக் கேட்ட மனுஷனுக்குக் கொடுக்க மறுத்துவிட்டு—மாறனுக்கே கொண்டுபோய் வெற்றியைக் கொடுத்துவிட்டனர்! வைஷ்ணவ குலத் திலகமான பக்தவத்சலத்துக்கு, சாத்த வேண்டியதை (பட்டை நாமம்) சாத்தியிருக்கின்றனர்!

சில ஆண்டுகளுக்கு முன்பு, நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியாரின் பிறந்தநாள் விழாக் கொண்டாடப்பட்டபோது முதியவர் பம்மல் சம்பந்தனாருக்குப் பொன்னாடை போர்த்தினார்கள்; அந்த விழாவில்—அப்போது முதலமைச்சராக இருந்த பக்தவத்சலனாரும் மற்ற அமைச்சர்களும் கலந்துகொண்டனர்; அப்போது பம்மல் சம்பந்தனார்,

"**எனக்குப் பொன்னாடை போர்த்துவதோ, பாராட்டு வழங்குவதோ என்னை மகிழ்விக்கவில்லை; எண்பது வயதைத் தாண்டிவிட்டேன்; எனக்கு இருக்கின்ற ஆசை ஒன்றே ஒன்றுதான்; 'சென்னை ராஜ்யம்' என்றிருக்கும் நமது மாநிலத்துக்கு, 'தமிழ் நாடு' என்ற பெயரைச் சூட்டவேண்டும்; நான் இறப்பதற்குள் இதனைச் செய்யவேண்டும்; 'தமிழ்நாடு' என்று அழைப்பதை என் காதால் கேட்டுவிட்டுச் சாகவேண்டும்; இதுதான் என் ஆசை; இந்த ஆசையை நமது மந்திரிகள் நிறைவேற்றுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்**"

என்று ஏக்கத்துடனும், நம்பிக்கையுடனும் தெரிவித்தார்.

ஆனால் பம்மல் சம்பந்தனார் கேட்ட பிறந்தநாள் பரிசை, அவருக்குக் கொடுக்காமலே தங்கள் பதவிக் காலத்தைக் கழித்துவிட்டனர்—பக்தவத்சலமும் அவரது கட்சியினரும்! பம்மல் சம்பந்தனாரும் தமது ஆசை நிறைவேறாத நிலையிலேயே உயிரை நீத்தார்!

பம்மலார் கேட்ட பிறந்தநாள் பரிசைக் கொடுக்க மறுத்த 'மாபாவி'யான பக்தவத்சலத்துக்கா அவர் கேட்ட பரிசை வழங்குவது—கூடவே கூடாது—பழிக்குப் பழி வாங்க வேண்டும்" என்று முடிவு செய்துவிட்டனர், தென் சென்னை மக்கள். அதன் விளைவுதான், நேற்று அறிவிக்கப்பட்ட தேர்தல் முடிவு.

'வைதீக பாஷை'யில் சொல்ல வேண்டுமானால், பம்மல் சம்பந்தனாரின் 'ஆவி'யோ, 'ஆத்மா'வோ பக்தவத்சலனாரைப் பழி தீர்த்துக்கொண்டுவிட்டது!

—மா. செ.

இடைத்தேர்தல் -- வாக்குகள் விவரம்

மொத்த வாக்குகள் : 5,83,721
பதிவான வாக்குகள் : 3,86,728

முரசொலி மாறன்	(தி. மு. க.)	2,41,304
சி. ஆர். இராமசாமி	(காங்)	1,35,596
ஜி. இராசரத்தின நாயகர்	(சுயே)	1,623
அப்துல் காதர்	,,	1,344
சி.எம். சீனிவாசன்	,,	1,100
அங்கண்ண செட்டியார்	,,	574
கே.வி. வைத்தியநாதன்	,,	238
செல்லாதவை		4,949

தொகுதிவாரியாகக் கிடைத்த வாக்குகள்

தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் அடங்கியுள்ள ஆறு சட்டமன்றத் தொகுதிகளிலும் கழக வேட்பாளர் முரசொலி மாறனும் காங்கிரசு வேட்பாளர் சி.ஆர். இராமசாமியும் பெற்ற வாக்குகள் முறையே வருமாறு:—

தொகுதி	மாறன்	இராமசாமி
எழும்பூர்	38148	21663
ஆயிரம்விளக்கு	39587	19499
திருவல்லிக்கேணி	35927	22530
மயிலாப்பூர்	36672	20904
தியாகராயநகர்	35556	23724
சைதாப்பேட்டை	55375	27246

அழிக்க விரும்பியவர்களே அழிந்துபட்ட படலம்!

"ஆண்டுதோறும் இரண்டு இலட்சம் பெண்கள் கருச் சிதைவுச் சிகிச்சையின்போது உயிர் இழக்கிறார்கள்"

என்ற தகவலை, மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் சந்திரசேகரர் தெரிவித்துள்ளார்.

குடும்பக் கட்டுப்பாடு பற்றிய கருத்தரங்கில் பேசிய அவர், இந்நிலை பற்றி மேலும் குறிப்பிட்டதாவது:—

"பயிற்சி பெறாத அரைகுறை வைத்தியர்களிடம் கருச் சிதைவுச் சிகிச்சை மேற்கொள்வதாலேயே இவ்வாறு இறக்க நேரிடுகிறது!

'கருச் சிதைவு', ஒரு குடும்பக் கட்டுப்பாட்டு சாதனமாக அமைய முடியாது—எனவும் அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

தி. மு. கழக இடைத் தேர்தல்கள்— நகராட்சித் தேர்தல் நிதி

ரூ. காசு

ஏற்கனவே வெளியிட்டுள்ள விவரப்படி 53,024.85

கோவை மாவட்டம்

ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 7,000-த்தின் தொடர்ச்சியாக வட்ட வாரியாக வசூலிக்கப்பட்ட தொகையில் ஏற்கனவே ஒப்படைத்ததுபோக மீதி பொருளாளரிடம் சேர்ப்பித்தது 9,662.00

கோவை வட்டச் சார்பில் செயலாளர் எஸ். ஏ. இராசமாணிக்கம் தலைமையில் தோழர்கள் ஏ. என். சாமி, இரா, மோகன், வி. சௌந்தரராசன், கே. எம். தங்கவேல், எஸ். பாலசுப்பிரமணியம், மரக்கான், கே. கோவிந்தராசலு எம்.எல்.ஏ. ஆகியோர் வசூலித்துக் கொடுத்த தொகை—ரூ. 4,000 ஆக 13,662 00

(இதுவரை அளிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 20,662).

தஞ்சை மாவட்டம்

ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 3,100-ன் தொடர்ச்சியாக தஞ்சை நகர தி. மு. க. சார்பில் செயலாளர் திரு. எஸ். நடராசன் மூலம் ரூ. 6,500.00

பட்டுக்கோட்டை வட்டச் சார்பில் செயலாளர் திரு. எம். கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ. மூலம் ரூ. 1,300.00

நாகப்பட்டினம் வட்டச் சார்பில் செயலாளர் திரு. அ. இராசகோபால் மூலம் ரூ. 1,004.00

மாயூரம் வட்டச் சார்பில் செயலாளர் திரு. எஸ். கணேசன் எம்.எல்.ஏ. மூலம் ரூ. 250.00

அரசு சார்பில் ரூ. 201.00

திருவாரூர் நகரச் சார்பில் உண்டியல் மூலம் வசூலித்தனுப்பிய தொகை ரூ. 265.37

குடந்தை வட்டச் சார்பில் செயலாளர் திரு. சு. பத்மநாபன் மூலம் – ரூ. 500 ஆக 10,020.37

(இதுவரை அளிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 13,120.37)

மதுரை மாவட்டம்

ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 8,000-த்தின் தொடர்ச்சியாகப் பொருளாளரிடம் மாவட்டச் செயலாளர் திரு. எஸ். முத்து அவர்களால் அளிக்கப்பட்டது 3,000.00

(இதுவரை அளிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரு. 11,000)

செங்கற்பட்டு மாவட்டம்

ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 1,000-த்தின் தொடர்ச்சியாக கும்மிடிப்பூண்டித் தொகுதி தோழர் கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ. மூலம் ரூ. 555.00

காஞ்சிபுரம் தொகுதித் தோழர் என். கிருஷ்ணன் எம்.எல்.ஏ. மூலம் – ரூ. 1,250.00 ஆக 1,805.00

(இதுவரை அளிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 2805).

நெல்லை மாவட்டம்

திருச்செந்தூர் வட்டச் செயலாளர் தோழர் பி. கண்ணபிரான் மூலம் ரூ. 855.00

நெல்லை வட்டச் செயலாளா தோழர் எஸ். மஸ்தான் மூலம் ரூ. 1,201.00

திருவைகுண்டம் வட்டச் செயலாளர் திரு. எஸ். பி. முத்து மூலம் ரூ. 1,011.00

கோயில்பட்டி வட்டச் சார்பில் மாவட்டச் செயலாளர் எம். எஸ். சிவசாமி எம்.எல்.ஏ. மூலம் ரூ. 1,450.00

தூத்துக்குடி நகரச் சார்பில் தோழர் எம். எஸ். சிவசாமி மூலம் ரூ. 1,250.00

மாவட்டச் செயலாளர் தோழர் எம். எஸ். சிவசாமி மூலம் ரூ. 1,000.00

நெல்லை சீதாபதி ரூ. 201.00

கோயில்பட்டி தோழர் கலைமணி 203.00 ஆக 7,171.00

(இதுவரை அளிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 7,171.00)

இராமநாதபுரம் மாவட்டம்

விருதுநகர் கிளையின் சார்பாக தோழர் வ. சங்கரபாண்டியன் மூலம் 1,000.00

(இதுவரை அளிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 1,000).

வட ஆற்காடு மாவட்டம்

ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 9,101-ன் தொடர்ச்சியாக ஆம்பூர் தோழர் சம்பங்கி மூலம் ரூ. 500.00

செங்கம் வட்டச் சார்பில் தோழர் கே. வி. குப்புசாமி மூலம் ரூ. 501.00 ஆக 1,001.00

(இதுவரை அளிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 10,102).

தருமபுரி மாவட்டம்

அரூர், தருமபுரி ஆகிய வட்டங்களின் சார்பில் வசூலிக்கப்பட்ட தொகை மாவட்டச் செயலாளர் திரு. எச். எல். முருகேசன் மூலம் 4,404 00

(இதுவரை அளிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ 4,404).

தென் ஆற்காடு மாவட்டம்

ஏற்கனவே அளிக்கப்பட்ட தொகை ரூ. 14,303-ன் தொடர்ச்சியாக சிதம்பரம் வட்டச் சார்பில் தோழர் பொன் சொக்கலிங்கம் அவர்களாலும் மற்றும் தோழர்களாலும் வசூலிக்கப்பட்டு 27–10–67 அன்று சிதம்பரம் பொதுக்கூட்டத்தில் உயர்திரு. எம். முத்துசாமி அவர்களிடம் அளிக்கப்பட்ட தொகை ரூ. 400.00

புதுவை வட்டச் சார்பாகச் செயலாளர் திரு. எம். ஏ. சண்முகம் மூலம் ஆக ரூ. 200.00 600.00

(இதுவரை அளிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 14,903).

கன்னியாகுமரி மாவட்டம்

உயர்திரு எம். முத்துசாமி அவர்கள் மூலம் அனுப்பிக் கொடுத்துள்ள தொகை 4,500.00

(இதுவரை அளிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 4,500).

சென்னை மாவட்டம்

மாவட்டச் சார்பாக (ரோடரி ஆயில் மில்) அளித்தது ரூ. 2,001.00

வழக்கறிஞர் வேலூர் டி. நாராயணன் ரூ. 501.00

தோழர் மணி ரூ. 500.00

68-வது வட்டக் கூட்டத்தில் பெயர் சூட்டிய வகையில் எம். எஸ். அப்துல் காதர் மூலம் ரூ. 15 00

மோட்டார் காலனி கூட்டத்தில் துண்டேந்தி வசூல்– திரு. எம். முத்துசாமி அவர்கள் மூலம் ரூ. 13.00

சைதாப்பேட்டை கூட்டத்தில் துண்டேந்தி வசூல்– திரு. எம். முத்துசாமி அவர்கள் மூலம் ரூ. 15.00

உயர்திரு எம். முத்துசாமி அவர்கள் மூலம் ஆங்காங்கு ரூ. 23.00 ஆக 3068.00

(இதுவரை அளிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 3,068).

சென்னை ஆபட்ஸ்பரி மண்டபத்தில் 29–10–67 அன்று நடைபெற்ற மாணவர் சனநாயகப் பாதுகாப்பு மாநாட்டில் அறிஞர் அண்ணா அவர்களிடம் மாணவத் தோழர்கள் அளித்த நிதி 4,444.00

சேலம் மாவட்டம்

சேலம் மாவட்டச் சார்பாகப் பொருளாளரிடம் அளிக்கப்பட்டுள்ள தொகை 2,750.00

(இதுவரை சேர்க்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 2,750).

ஆக மொத்தம் ரூ. **1,10,450.22**

—பொருளாளர், தி.மு.க.

விவசாயப் பணிக்கு 'விமானப் படை'!

மத்திய அரசின் திட்டம் --- பல நாடுகளை அணுகுகிறது!

மத்திய அரசாங்க உணவு—விவசாய அமைச்சகம், 'விவசாய விமானப் படை' ஒன்றை அமைக்கத் திட்டமிட்டிருக்கிறது!

1970-71-ம் ஆண்டு வாக்கில், 50 இலட்சம் ஏக்கருக்குப் பூச்சி மருந்துகளைத் தெளிக்கும் வசதியைப் பெறுவதே அதன் நோக்கமாகும்.

ஆரம்பத்தில், மருந்து தெளிப்புக்கான 50 சிறிய விமானங்களை வாங்கத் திட்டம் போடப்பட்டுள்ளது; பின்னர் மேலும் 50 விமானங்கள் இடம்பெறும்.

விவசாய வேலைகளுக்கென ஹெலிகாப்டர் விமானங்களைப் பெறவும் அந்த அமைச்சகம் உத்தேசித்துள்ளது; அவை, மாநில அரசாங்கங்களுக்கும் கடனாக அளித்து உதவப்படும்.

ஏற்கனவே விவசாய அமைச்சகத்திடம் ஒரு சில விமானங்கள் உள்ளன; அவை, மருந்து தெளிப்பு வேலைக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

விவசாய வேலைக்கான விமானங்களை மேலும் பெறும் திட்டம் பற்றி அண்மையில் புதுடில்லிக்கு வந்த உலக பாங்கிக் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது; அவ்வகை விமானங்களை வாங்குவதற்கு உதவுமாறு இப்போது அமெரிக்க அரசாங்கத்தையும், மற்ற நாடுகளையும் இந்தியா அணுகியுள்ளது.

அவ்வகை விமானங்களை ஓட்ட நாட்டில் உள்ள விமானப் பயிற்சி நிலையங்களில் விமானிகளைப் பயிற்றுவிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாணவரிடம் தோற்றவருக்கு மறுமுறையும் பதவி நீடிப்பா?

கட்சி சரிவுக்குக் காரணமானவருக்கு மேலும் ஒரு பதவிக் காலமா?

காமராசருக்கு உத்தரப் பிரதேசத்துக்காரர் எதிர்ப்பும் கண்டிப்பும்!

"முன்பே சரிந்துவந்த கட்சியின் பலம்—கௌரவம், காமராசர் தலைவராக வந்தவுடன் விரைவாக சரிய ஆரம்பித்தது!

"மாணவர் ஒருவரிடம் சட்டமன்றத் தேர்தலில் தோற்றதன் காரணமாகக் காமராசர், தமது 'சுய கௌரவ'த்தை மட்டும் இழக்கவில்லை; கட்சியின் பெருமை—பாரம்பரியம்—பலம் ஆகிய அனைத்தையும் அழித்துவிட்டார்!

"அவருடைய நன்மைக்காகவும், அதைவிட மேலாகக் கட்சியின் நன்மைக்காகவும் காமராசர், மறபடியும் தலைவராக நீடிப்பதற்கு விரும்பக்கூடாது"

என்று, உத்தரப் பிரதேசக் காங்கிரசு செயலாளர் கேவல் கிஷோர், லக்னோவில் கூறியிருக்கிறார்.

"கட்சித் தலைவர் தேர்தலில், போட்டியின்றிக் காமராசர் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்" என்ற செய்தி பற்றி, வேடிக்கை கலந்த ஆச்சரியத்தினைக் காட்டியுள்ளார், அவர்!

இந்தியாவில் 'ரஷ்யக் கொள்ளையாம்'

செஞ்சீனாவின் குற்றச்சாட்டு

சோவியத் யூனியன்மீது சீனா வீசும் வசைமாரி, உச்சக் கட்டத்தை எட்டிவிட்டது; 'திரிபுவாத இரஷ்யா', அமெரிக்காவுடனும் பிரிட்டனுடனும் சேர்ந்துகொண்டு—'உதவியளிக்கிறோம்' என்ற முகமூடியை அணிந்து—வளர்ச்சியடையாத மக்களைக் 'கொள்ளையடித்துச் சுரண்டுகிறது' எனத் தாக்குகிறது!

'பீகிங் ரிவியூ' என்ற பத்திரிகையில் கட்டுரைகளை வெளியிட்டு இக் கடுமையான தாக்குதல் தொடங்கப்பட்டிருக்கிறது.

"சோவியத்தின் திரிபுவாதம், இன்று இந்தியாவைக் கொள்ளையடிப்பதில் அமெரிக்க—பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்களுக்கு அடுத்தபடியாக இருக்கிறது"

என்று ஒரு கட்டுரை குற்றஞ்சாட்டுகிறது!

"இரஷ்யா உதவிப் பணத்துடன் சோவியத்துப் பொருட்களைப் பிணைத்து, மட்டமான சரக்குகளை இந்தியாவில் குவிக்கிறது; திட்டப் பணிக்கான சாதனங்களின் விலையை உலக விலைகளைவிட 20—30 சதவிகிதம் அதிகமாக உயர்த்துகிறது"

என்றும் அந்த ஏடு கூறியிருக்கிறது.

"சோவியத் உதவியானது 'அமெரிக்க உதவி'யைப் போன்று, காங்கிரசுக் கட்சியின் ஆதரவுள்ள பெரிய நிலச்சுவான்தாரரும், பூர்ஷ்வா வர்க்கத்தினரும் பயன்பெறும் வகையில் இருக்கிறது; இந்திய மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கும் நோக்கத்துடன் வழங்கப்படுகிறது"

என்றும் அது குற்றஞ்சாட்டியிருக்கிறது!

மாஸ்கோ, இந்தியாவில் மட்டும் 'ஏகாதிபத்தியக் கொள்ளை'யை நடத்துகிறது என்று சீனா குற்றஞ்சாட்டவில்லை; சோவியத் யூனியன் மங்கோலிய மக்கள் குடியரசுடனும், ஆப்பிரிக்க நாடுகளுடனும் வைத்திருக்கும் பொருளாதார உறவுகளையும் அதே வேகத்தில் கண்டிக்கிறது.

வங்காளத்தில் 'அரிசி இல்லா வாரம்'

மத்திய அரசு காரணம்!

அளவுப் பங்கீட்டு முறை இருக்கும் மேற்கு வங்கப் பகுதிகள் அனைத்தும் இந்த வாரம், தங்கள் அரிசியைப் பெற முடியாத நிலையில் இருக்கின்றன!

அரிசிக்குப் பதிலாக வங்க அரசு,

(4-ம் பக்கம் பார்க்க)

'வரம்' கேட்கும் ஆலயத்திற்கு அருகில் விவரம் தரும் அலுவலகம்

'பிள்ளை'கள் ஒரு பிரச்சினை !

மைசூர் மாநிலத்தில் உள்ள கோலாருக்கு அருகில், குடும்பக் கட்டுப்பாட்டு நிறுவனத்தினர், வேடிக்கையான முயற்சி ஒன்றினைத் துவக்கியுள்ளனர் !

'கவுரிபிதுனூர்' விஷ்ணு கோயிலுக்கு ஏராளமான அளவில் நாள்தோறும் 'பிள்ளை வரம்' கோரும் தம்பதிகள் வருவது வழக்கம் !

இந்த ஆலயத்துக்கு வெகு அருகில் உள்ள சத்திரம் ஒன்றிலேயே குடும்பக் கட்டுப்பாட்டு நிலையம் ஒன்று துவங்கப்பட்டு, அதிகக் குழந்தைகள் பெருமலிருப்பதற்கான யோசனைகளும் மக்களுக்கு வழங்கப்படுகின்றன !

நமக்கு ஏற்பட்ட வியப்புதான் அங்கும் ஏற்படுகிறது-- வேடிக்கை மனிதராகிறுர் விருதுநகர் காமராசர் !

"'போட்டி இல்லை என்றால், தலைவராக இருப்பேன்' என்று காமராசர் கூறியிருப்பதனை, 'ஏதோ இராசதந்திரம்' எனக் கருதிக் கொண்டிருப்பவர்களும் இருக்கிறார்கள் !

"தங்கிச் சாப்பிட்ட நாளெல்லாம் சாப்பிட்டுவிட்டு, கடைசியாக, 'மலையைத் தூக்கி என் தலைமீது வையுங்கள்; பின்னர், தூக்குகிறேனா இல்லையா என்று பாருங்கள்' என்று ஒரு அரசவையையே ஏமாற்றிய எத்தனின் கதையைத்தான் காமராசரின் கருத்து நினைவுபடுத்துகிறது !

"'போட்டி இருக்கிறது' என்பது சுவர்மேல் எழுத்தாக இருக்கும்போது, 'போட்டி இல்லையென்றால் நான் நீடிக்கிறேன்' என்று திரும்பத் திரும்பக் காமராசர் கூறுவது, பின்னால், 'நான் ஏன் திரும்பவும் தேர்ந்தெடுக்கப்படவில்லை' என்று விளக்கம் தர ஒரு சாதனமாக இருக்கமுடியுமே தவிர, அவரது சாமர்த்தியத்துக்கு ஒரு அறிகுறியாக அமையமுடியாது !

"மலையையும் தூக்கமுடியாது—தூக்கியே வைத்தாலும் தாங்கமுடியாது ! சாத்தியக் கூறுகளுக்கு ஒத்துவராத இரண்டினை இணைப்பது, இடையில் தப்பித்துக் கொள்வதற்கு இருக்கும் ஒரு மார்க்கம் !

"காங்கிரசுத் தலைவர் தேர்தலில் காமராசரின் ஆயுதமாக இருக்கப் போவது இதுதான் !"

—'நம் நாடு' : 2—11—67-ல் வெளிவந்த 'உள்ளும் புறமும்' கட்டுரைப் பகுதியிலிருந்து.

'போட்டியின்றி ஏகமனதாகக் காமராசர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்' என்ற கோரிக்கையை, உத்தரப் பிரதேசக் காங்கிரசுச் செயலாளர் கேவல் கிஷோர் எதிர்த்திருக்கிறார் !

"'வேறு யாரும் போட்டியிடவில்லையென்றால், நான் மீண்டும் தலைவராக நீடிக்கச் சம்மதிக்கிறேன் என்று காமராசர் கூறியதாக வெளிவந்திருக்கும் செய்தி, எனக்கு வேடிக்கை கலந்த ஆச்சரியத்தினைக் கொடுத்திருக்கிறது' என, கேவல் கிஷோர் தெரிவித்திருக்கிறார்."

—யு. என். ஐ. நிறுவனத்தின் 7—11—67 தேதியிட்ட லக்னோ செய்தி.

வேளாண்மைக்கு பாங்கிகள் அளிக்கும் கடன்

மிகக் குறைவானதுதானும்

பாங்கித் தொழிலிலுள்ளவர்கள் என்னதான் மறுத்தாலும் வேளாண்மை மற்றும் சிறு தொழில் துறைக்குப் பாங்கிகள் அளிக்கும் கடன் மிகவும் அற்பமாகும் !

வர்த்தகப் பாங்கிகள் சென்ற ஆண்டு அளித்த மொத்தக் கடன் ரூ. 2,347 கோடியில் வேளாண்மைத் துறைக்குக் கிடைத்தது ரூ. 4.65 கோடி தான் !

சிறு தொழில் துறை 1966 மார்ச்சு இறுதிவரை ரூ. 90.76 கோடியை அவற்றிடமிருந்து கடனாகப் பெற்றிருக்கிறது ; இருப்பினும், இப்பணத்தில் பெரும் பகுதி 'ஸ்டேட் பாங்கி'யிலிருந்து வந்தது என்பதையும் மறந்துவிடலாகாது!

நம் உணவில் மூன்றில் ஒரு பாகம் சேதமாகிறது—அழுகும் பண்டங்களைப் பாதுகாக்காவிடில் உணவுப் பிரச்சனை மேலும் தீவிரமாகும்.

சரியான 'பாக்கிங்' முறை மூலம் இச் சேதத்தைத் தடுக்கலாம்

காய்கறிகள், பழங்கள், மீன், இறைச்சி, பால் பொருட்கள் இவையே விரைவில் சேதமடைந்து உபயோகிக்க இயலாமல் போகின்றன. அதன் காரணங்கள் பல.

அவைகளை உற்பத்தி செய்யுமிடங்களிலிருந்து தொலை தூரத்தில் இருக்கும் சந்தைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. வழியில் பல்வேறு வெப்பநிலைகளால் பாதிக்கப்படுவதால் விற்பனை இடத்தையடையும் தருணத்தில் அவை நல்ல நிலையில் இருப்பதில்லை. இவற்றைப் பதமாக வைக்க ஏற்ற குளிர்ச்சாதன வசதிகளோ மற்ற வசதிகளோ இல்லாமையே இதன் காரணம். இந்நிலையில் இவற்றுக்குப் பாதுகாப்பளிக்கும் ஒரே வழி சிறந்த 'பாக்கிங்' முறையே.

விஞ்ஞான முறையில் பதப்படுத்தி 'பாக்' செய்தால் இப் பொருள்கள் சேதமடைவதைத் தவிர்க்க முடியும். மேலும், பெரும் அளவில் நாட்டில் எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லவும் 'பாக்' செய்யப்பட்ட பொருள்கள் வசதியானவை.

நாட்டின் உணவு சேதமாவதைத் தடுக்க மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் விஞ்ஞான முறையில் பதப்படுத்தும் முறைகளை அளிக்கிறார்கள். உணவுப் பொருட்களைச் சோதிப்பது, அவற்றுக்கேற்ற 'பாக்கிங்' முறைகளை சிபாரிசு செய்வது - உதாரணமாக, வெவ்வேறு மாதிரியான தகர டின்களிலும், மற்றும் வெளிநாடுகளிலிருந்து அறிந்து வந்த தொழில் நுட்பத்துடன் கூடிய சிறந்த 'பாக்கிங்' முறைகளையும் அளிப்பது இவையெல்லாம் இவ் வசதிகளில் அடங்கியவை.

இந்தியாவில் உள்ள 9 நிறுவனங்கள் மூலமும் மெட்டல் பாக்ஸ் கம்பெனியார், உணவுச் சேதத்தை தடுக்க உதவுகின்றனர். இப்போதைய உணவுப் பற்றுக் குறை நிலையில் எங்கள் பணி மிகவும் சிறியது என்பதை நாங்கள் அறிவோம். ஆயினும் இச் சமயத்தில் சிறு துளியும் பெரு வெள்ளமாக உதவும் என்ற நம்பிக்கையே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

MB

மெட்டல் பாக்ஸ்

பாதுகாப்பான பாக்கிங்

MS/4101

தங்கள் நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளனர் மக்கள்!

கழகத்தின் சக்தியைக் காமராசர் உணர்ந்திருப்பார்!

தென் சென்னைத் தேர்தல் முடிவு—அறிஞர் அண்ணு அறிக்கை

சென்னை, நவ. 9—

தென் சென்னை இடைத் தேர்தலில் கழகத்துக்குக் கிடைத்துள்ள மாபெரும் வெற்றி குறித்து அறிஞர் அண்ணு அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

"தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதி மக்கள் மீண்டும் ஒருமுறை, திராவிட முன்னேற்றக் கழகத்தினிடம் தாங்கள் கொண்டுள்ள நம்பிக்கையினையும், உறுதிப்பாட்டினையும் தெரிவித்திருக்கிறார்கள்.

"அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் காமராசர், அறைகூவலை ஏற்றுக்கொண்டு காங்கிரசுத் தேர்தல் இயக்கத்தை நேரடியாகத் தலைமைதாங்கி நடத்தியிருந்தும், மக்கள் தங்களது நம்பிக்கையினை மேலும் உறுதியோடு தெரிவித்திருக்கிறார்கள்.

"தி. மு. கழக அரசிடம் மக்கள் வெறுப்படைந்திருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு தம் முழுபலத்தையும் செலுத்திய காமராசர், 'தி. மு. கழகம் என்பது தம்மையும் மீறியதொரு சக்தி' என்பதை உணர்ந்திருப்பார் என்று நான் நினைக்கிறேன்.

"'ஆளும் கட்சி' என்கிற முறையில்—தி. மு. கழகத்தினிடம்—அது செயல்பட்ட விதம்பற்றித் தாங்கள் முழு திருப்தியடைந்திருப்பதைத் தங்களது வலுவான ஆதரவின் மூலம் மக்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

"மக்களுக்கும், கூட்டணியில் அங்கங்களாக விளங்கிய கட்சியினருக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாமெல்லாம், மக்கள் பணிக்கு நாம் நம்மை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்வதோடு—அவர்களோடு உறுதியாக நாம் நின்று, 'அவர்களது நிலை உயர—அவர்களது நல்வாழ்வுக்கான திட்டங்களை நிறைவேற்றிடுவோம்' என்ற உறுதியினை அளித்திடவும் வேண்டும்.

"மக்களின் நல் ஒத்துழைப்போடும், பல்துறைப் பெரியவர்களின் வழிகாட்டுதலோடும் இம்மாநிலத்தில் தூய்மையான ஆட்சி நிர்வாகத்தை அளித்திட—மக்கள் நலப் பணிகள் ஆற்றிட—சமூக நீதி நிலைபெறச் செய்திட—பொருளாதாரப் புனர்வாழ்வு எய்திட—சமநிலை கண்டிட—தி. மு. கழகம் உறுதிகொண்டுள்ளது."

இராஜாஜி

சுதந்தராக் கட்சித் தலைவர் திரு. இராஜாஜி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:—

"நான் கேட்டுக்கொண்டபடி மக்கள், தென் சென்னைத் தேர்தலில், 'ஒட்டக்கூத்தனுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' போட்டது போல், காங்கிரசை, 'போ' என்று சொல்லிவிட்டனர்!

"பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றதைவிட, இந்த உப தேர்தலில் தி. மு. கழகம் அதிக பலத்துடன் வெற்றி பெற்றுவிட்டது!

"இடைத் தேர்தலில் நூற்றுக்கு 65 வாக்காளர்கள் வாக்குப் பதிவு செய்துள்ளனர்! இது, காங்கிரசைத் தோற்கடிக்க மக்களுக்கு இருந்த உறுதியைக் காட்டுகிறது!

"அகில இந்தியாவைப் பொறுத்தமட்டில், இது, காங்கிரசுக்குப் பெரிய தோல்வி!

"தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், தி. மு. க.—வுக்கு அமோக வெற்றி! திரு. மாறன் அவர்களுக்கு என் வாழ்த்து!"

பெரியார்

திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தெரிவித்துள்ளதாவது:—

"தென் சென்னையில் தி. மு. க. வேட்பாளர் முரசொலி மாறன் வெற்றி பெற்றது மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடிய செய்தி. காங்கிரசைப் படுதோல்வியடையச் செய்து தி. மு கழகத்தை வெற்றியடையச் செய்தது, 'தி. மு. க. ஆட்சிக்கு மக்கள் ஆதரவு கொடுக்கிறார்கள்' என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

"இதன் மூலம், தி. மு. கழக ஆட்சியின் பலம் நாளுக்குநாள் அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை!

"இந்தத் தேர்தல், 'இந்தி வேண்டுமா—வேண்டாமா?' என்ற அடிப்படையிலேயே நடந்தது. மாறன் வெற்றியடைந்ததால், 'இந்தி வேண்டாம்' என்பதை மக்கள் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்கள். இதிலிருந்து, 'மக்கள், இந்தியை வெறுக்கிறார்கள்' என்பது உறுதியாகிவிட்டது!

"இந்திப் பிரச்சினை இத்தோடு நில்லாமல், இன்னும் எந்தெந்த விதங்களில் மாற்றங்களைக் கொடுக்குமோ என்பது, போகப் போகத்தான் தெரியும்!

"தென் சென்னை வாக்காளர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

காதில் விழுந்தது !

ஒரு காங்கிரசுக்காரர் :

"என்னண்ணே! தலைவர் அடுத்த மாதம் கட்சித் தலைவர் தேர்தலுக்கு நிற்பாரா?"

மற்றொரு காங்கிரசுக்காரர்:

"என்ன தம்பி! இப்படிக் கேட்டுக்கொண்டு — சிறு பிள்ளை மாதிரி! அவர் இனி வடக்கே தலை வைத்தும் படுக்க முடியாதே!"

காங்கிரசுத் தொண்டர் :

"என்னய்யா—நம்ம பேப்பர்களிலே இன்று ஒன்றையும் காணோம்!"

மற்றொரு காங்கிரசுக்காரர்:

"என்னத்தை எழுத! அது தான் ஏழாந் தேதியே எழுதிவிட்டாரே, நமது எழுத்தாளர் ஒருவர்—எப்படியும் 'தர்மம் வெல்லும்' என்று! அப்பொழுது அப்படி எழுதிவிட்டு இப்போது எப்படிச்சமாளிக்கிறதாம்? எல்லாம் ஒரே வேதனை! வேறு ஏதாவது பேசுவோம்!"

மறைவு

சென்னை, நவ. 9—

"சென்னை 2-வது வட்ட தி.மு.க. அவைத் தலைவர் திரு.பி. கோவிந்தசாமி இன்று விடியற்காலை இயற்கையெய்தினர்; இன்று மாலை 5-மணிக்கு காசிமேடு இடுகாட்டில் சவ அடக்கம் நடைபெறும்; கழகத் தோழர்கள் கலந்துகொள்ள வேண்டுகிறேன். தோழர் கோவிந்தசாமியைப் பிரிந்து துயருறும் அவர்தம் குடும்பத்தாருக்கு வட்டக் கழகச் சார்பில் அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று வட்டச் செயலாளர் சே. அரசு அறிவிக்கிறார்.

இரா. நெடுஞ்செழியன்

தி. மு. க. அவைத் தலைவரும், கல்வியமைச்சருமான திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திருச்சியில் செய்தியாளரிடையே தெரிவித்த கருத்து:—

"தென் சென்னை இடைத் தேர்தலில் தி. மு. கழகம் அடைந்த மகத்தான வெற்றியின் வாயிலாக, காங்கிரசுக் கொள்கைகளின் சூனியத் தன்மை அம்பலமாக்கப்பட்டுள்ளது."

எம். ஜி. ஆர்.

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்,ஏ. அவர்கள் தெரிவித்திருப்பதாவது ;—

"இந்தியத் துணைக்கண்டமும், வெளிநாடுகளிலும்கூட எதிர்பார்த்துக் கொண்டிருந்த தென் சென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தலின் முடிவை, 'இலட்சம் வாக்குகளுக்குமேல் அதிகம் பெற்று, தி. மு. கழக வேட்பாளர் வெற்றி பெற்றார்' என்றவகையில் சென்னை நகர மக்கள் அறிவித்துவிட்டார்கள்!

"'தேர்தலில் மக்கள் 'போதை'யில் காங்கிரசைத் தோற்கடித்து விட்டார்கள் ; இப்பொழுது நிதானித்துக் கொண்டார்கள் ; இனிமேல் காங்கிரசை வெல்ல யாராலும் முடியாது ; காங்கிரசு ஆட்சிப் பொறுப்பில் இல்லாததால் தொழிலில் வளர்ச்சி இல்லை ; சட்டம்—அமைதி காப்பாற்றப்படவில்லை' என்ற பொய்ப் பிரச்சாரங்களையெல்லாம் உடைத்தெறிந்து தி. மு. கழகத்தின் ஆட்சியை வாழ்த்தி வரவேற்கின்ற முறையில் அளிக்கப்பட்ட இத்தீர்ப்பு, இந்திய அரசியலிலும்—தமிழக அரசியலிலும் எதிர்கால நிலையை உணர்த்தும் மிகச் சிறந்த முன்னறிவிப்பாகும்!

"இத்தகைய மகத்தான வெற்றியை அளித்த தென் சென்னை வாக்காளப் பெருமக்களுக்கு எனது மனமார்ந்த வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டு மிகச் சிறந்த வெற்றியின் சின்னமாக விளங்கும் தம்பி மாறனுக்கு என் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

இண்டியன் இன்டர்நேஷனல் டிரேட் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் ஃபேர் -- 1968

தபால் பெட்டி 2522 -- மதராஸ்-30

கேபிள் : "INDIANFAIR" போன் : 61123 / 61124 / 61125

ஷாப்பிங் சென்டர்

ஃபேரின் ஷாப்பிங் சென்டரில் இன்னும் சில ஸ்டால்கள் காலியாக உள்ளன. உடனே செக்ரடரி ஜெனரலுக்கு விண்ணப்பம் செய்யுங்கள்

அமைச்சர்

எஸ். ஜே. சாதிக்பாட்சா

சுற்றுப்பயணம்

நவ. 11: காலை 8-30 மணி: கோவை மாவட்டத்தில் விமான மூலம் மருந்து தெளிப்பு முறையைத் துவக்கிவைத்தல் ; 11 மணி : கூனூர் ; மாலை 4-30 மணி : உதகமண்டலம் — தேசிய அம்மை நோய் ஒழிப்பு வார விழாவில் கலந்துகொள்ளல் ;

நவ. 12 : காலை 9 மணி : கோயம்புத்தூர் ; 10 மணி : செம்மாண்டாம் பாளையம்புதூர்—ஆரம்பப் பள்ளித் துவக்க விழா ; 11-30 மணி : சோமனூர்—தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலப் பட்டா வழங்குதலும், அரசினர் மருத்துவமனையைப் பார்வையிடலும் ; மாலை 3-30 மணி : பல்லடம்—அரசினர் மருத்துவமனையைப் பார்வையிடல் ; 5 மணி : அப்பநாய்க்கன்பட்டி—பொதுமக்கள் வரவேற்பு ; இரவு 7 மணி : பல்லடம்—பொதுமக்கள் வரவேற்பு ; 10 மணி : உடுமலைப்பேட்டை ;

நவ. 13 : மாலை 5 மணி : உடுமலைப்பேட்டையில் மாநில மின்சார போர்டின் புதிய ரெவினியூ யூனிட்டை துவக்கிவைத்தல் ;

நவ. 14 : காலை 9-30 மணி: மதுரை தமுக்கம் திடலில் குழந்தைகள் தின விழாவில் கலந்துகொள்ளல் ;

நவ. 15: காலை 8-30 மணி: செங்கம்—அரசினர் மருத்துவமனையைப் பார்வையிடல் ; 9-30 மணி : செங்கம்—பள்ளிவாசலில் முஸ்லீம்கள் வரவேற்பு ; 10-30 மணி: செங்கம் மருத்துவமனைக்கான இடத்தைப் பார்வையிடல் ; 11-30 மேல்பள்ளிப்பட்டு—ஊராட்சி மன்ற வரவேற்பும் ஆரம்ப சுகாதார நிலையத் திறப்பு விழாவும் ; பிற்பகல் 1-30 மணி: புரசபட்டு—ஊராட்சி மன்ற வரவேற்பு ; 3-30 மணி : அரட்டவாடி—ஊராட்சி மன்ற வரவேற்பு ; மாலை 4-30 மணி : செங்கம்—நகர பஞ்சாயத்து வரவேற்பு ; 5-30 மணி : செங்கம்—ஊராட்சி ஒன்றியம் வரவேற்பு.

நன்றி—வணக்கம்

"தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் தி. மு. கழகத்துக்கு வெற்றி தேடித்தந்த வாக்காளப் பெருமக்கள்—வாழ்த்துரை வழங்கியோர்—அயராது பணியாற்றிய மாவட்ட, வட்ட, பகுதிக் கழகச் செயலாளர்கள்—ஊழியர்கள்—கழகத்தின் முன்னணியினர்—சட்டப் பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர்கள்—பிற மாவட்டச் செயலாளர்கள்—கழகத் தோழர்கள்—மாநகராட்சி உறுப்பினர்கள்—மாணவச் சமுதாயத்தினர்—தோழமைக் கட்சி நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் என் உளங்கனிந்த நன்றியறிதலைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அன்பன்

முரசொலி மாறன்

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

11—11—67

அரியலூர்

தி. மு. க. சார்பில் இரவு 9-மணிக்கு ; தலைவர் : எஸ். கே. ஏ. முருகையா ; பேசுவோர் : அமைச்சர் சத்தியவாணிமுத்து, கோ. சிவப்பெருமாள், கே. என். இராமச்சந்திரன் எம்.ஏ.,எம்.எல்.ஏ., இரா. நாராயணன் எம்.எல்.ஏ., ஜே. எஸ். இராசு எம்.எல்.ஏ., து. எத்திராசன், தங்கையன், மணி, கோவிந்தராசு, பிச்சமுத்து, ஏ. எஸ். மணி, கண்ணபிரான், ஏ. எஸ். ஆராமிர்தம், ந. மருதமுத்து.

சிவகாசி

மஜீத் நினைவு மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு பாவடித் தோப்புத் திடலில் ; தலைவர் : க. மு. மதார் ; பேசுவோர் : ஜி. ஆர். எட்மண்ட் எம்.எல்.ஏ., நெல்லை நெடுமாறன், எஸ். ஏ. ரசாக், எஸ். பி. மணியம், துரைக்கண்ணன், வே. கருணாகரன், கே. மாரியப்பன், அ. வேலாயுதம்.

வெற்றி விழா

சென்னை 6-வது வட்டம் அண்ணா மறுமலர்ச்சி மன்றச் சார்பில் 10—11—67 மாலை 4-மணிக்கு முரசொலி மாறன் வெற்றி விழா நிகழ்ச்சி ; பேரம்பாலு செட்டி தெருவில் எஸ். ஆர். கோபால் தலைமையில் இனிப்பு வழங்கப்படும் ; ஏ. நாகலிங்கம் கழகக் கொடியேற்றிவைப்பார்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கோதுமையைத் தர இருக்கிறது !

"உரிய நேரத்தில் அரிசிப் பங்கீட்டினை மத்திய அரசு அனுப்பி வைக்காததே இதற்குக் காரணம்" எனக் கூறப்படுகிறது !

மேற்கு வங்காளத்தில் அளவுப் பங்கீட்டு முறையின்கீழ் ஒரு கோடி மக்கள் இருக்கிறார்கள் !

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-[illegible]) [illegible]